**OS.22/2024**

**நாள். 26.02.2026.**

**பி.வா.சா.1 – பாலச்சந்திரன்**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் நேஷனல் அகாடமி பள்ளியில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். 2ம் பிரதிவாதி சாத்தையா எனது தகப்பனார் என்றால் சரிதான். 3, 4ம் பிரதிவாதிகள் என் சகோதரன் மற்றும் சகோதரிகள் என்றால் சரிதான். 3, 4 பிரதிவாதிகள் தவிர்த்து என்னுடன் பிறந்தவர்கள் வேறுயாரும் உள்ளனரா என்றால் இல்லை. நான், என்னுடைய தகப்பனார், சகோதரர், சகோதரி தெற்குத்தரவை கிராமம் அம்மன்கோவில் தெருவில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். நாங்கள் ஒரே குடும்பமாகத்தான் வசித்து வருகிறோம் என்றால் இல்லை, தனித்தனியாக வசித்து வருகிறோம். என் அப்பா தனியாகத்தான் வசித்து வருகிறார். என் அப்பா அம்மன்கோவில் தெருவில் பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார். நான் வசித்து வரும் வீட்டின் கதவு எண்.1/95 என்றால் சரிதான். கதவு எண்.1/95 வீட்டில்தான் என் அப்பா 2023 வரை வசித்து வந்தார் என்றால் சரிதான். தாவா வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் பக்கத்து வீட்டிற்கு குடிபெயர்ந்தார் என்றால் சரிதான். தாவா வழக்கு தாக்கல செய்த பிறகு எனக்கும், 2, 3 பிரதிவாதிகளுக்கும் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கதவு எண்.1/95க்கு அனுப்பப்பட்டு எங்களால் பெறப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து என் தந்தை சாத்தையாவிற்கு எப்படி பாத்தியம் என்றால் தெரியாது. என் தந்தை எனக்கு தாவா சொத்தை பொறுத்து எழுதி கொடுத்த இனாம் பத்திரத்தில் அவருக்கு 18.06.1993 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் மூலம் கிரையப்பாத்தியம் என சொல்லியுள்ளார் என்றால் சரிதான். 1993ம் ஆண்டு முதல் எனக்கு 2018ம் ஆண்டு இனாம்செட்டில்மென்டு எழுதி கொடுக்கும் வரை தாவா சொத்து பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தை சுற்றி யார் வசித்து வருகிறார்கள் என்ற விவரம்

எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்துக்கு செல்ல பாதை உள்ளதா என்றால் இல்லை. எனக்கு பண நெருக்கடி இருந்ததால்தான் நான் தாவா சொத்தை கிரயம் செய்ய விரும்பினேன் என்றால் சரிதான். ஆனால் பாதை இல்லை என்பதால் யாரும் வாங்க முன்வரவில்லை என்றால் சரிதான். நான் வாதி சுப்ரமணியனிடம் எப்படியாவது பாதை வாங்கி தருகிறேன், நீங்கள் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்லித்தான் தாவா கிரைய அக்ரிமென்டை போட்டேன் என்றால் சரிதான். அதனால் தான் நானும், வாதியும் எழுதிக்கொண்ட கிரய ஒப்பந்தத்தில் எவ்வளவு காலத்திற்குள் கிரையம் முடித்துக்கொள்ளவேண்டும் என்று எழுதவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா கிரைய ஒப்பந்தம் போட்ட அன்று நான் வாதியிடமிருந்து ரூ.5 இலட்சம் கிரைய முன்பணமாக பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல, ரூ.3 இலட்சம் தான் பெற்றேன். என் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையிலும், நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலும் கிரைய ஒப்பந்தம் போடப்பட்ட 20.02.2019 அன்று ரூ.5 இலட்சம் கிரைய ஒப்பந்த முன்தொகையாக பெற்றுக்கொண்டது உண்மை என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் பெயருக்கு இனாம் எழுதிக்கொடுத்த பிறகு நான் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டாலும் கிரயம் சம்மந்தமாக என் தகப்பனார் சாத்தையாதான் என் சார்பாக பார்த்துக்கொண்டார் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்த பத்திரத்தில் என் தகப்பனார் மற்றும் சகோதரர் வரவு வைத்து கொடுத்துள்ள தொகைகளை என் சார்பாக பெற்றுக்கொண்டு கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. தாவா வழக்கு தாக்கல் செய்த பிறகாவது என் அப்பாவிடம் பணம் பெற்றுக்கொண்டது சம்மந்தமாக கேட்டேனா என்றால் கேட்கவில்லை. 2019 ம் ஆண்டு கிரைய ஒப்பந்தம் போட்ட பிறகு தாவா சொத்திற்கு பாதை நான் ஏற்பாடு செய்து தரவில்லை என்பதால் வாதி செலுத்திய ரூ.35 இலட்சத்தை திருப்பி கேட்டார் என்றால் எனக்கு தெரியாது. வாதி கொடுத்த பணத்தை கேட்டபோது நான் அவரிடம் பிரச்சனை செய்தேன் என்றால் அவர் யார் என்றே எனக்கு

தெரியாது. அதனால் என் மீது இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் 20.04.2022 ம் தேதியில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகாரின் அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்ட குற்ற பிரிவு போலிசார் என்னையும், என் தகப்பனார், சகோதரரையும் அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். குற்றபிரிவு போலிசார் விசாரிக்கும்போது வாதி 3 வருட காலத்திற்குள் கிரைய ஒப்பந்தப்படி கிரையம் முடிக்க முன்வராததால், சொத்தின் மதிப்பு அதிகமாகிவிட்டது என விசாரணையின்போது தெரிவித்தோம் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. நான் வாங்கிய ரூ.5 இலட்சம் சேர்த்து என் தகப்பனார், சகோதரர் வாங்கிய ரூ.35 இலட்சத்தை 20.07.2022 க்குள் திருப்பி செலுத்திவிடுவதாக வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான், போலிசார் என்னை வழக்குபோட்டு சிறைக்கு அனுப்பிவிடுவோம் என்று சொன்னதால் அவ்வாறு எழுதிக்கொடுத்தேன். நான் மாவட்ட குற்றபிரிவு போலிசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் என் தந்தையும், சகோதரரும் படித்து தெரிந்து கொண்டதாக கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மாவட்ட குற்றபிரிவு போலிசார் விசாரணைக்கு பிறகு நானும், எனது தந்தையும் வழக்கறிஞர் வேலுதாஸ் மூலம் வாதிக்கும், மாவட்ட குற்றபிரிவு போலிசாருக்கும் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு **வா.சா.ஆ.5**. வா.சா.ஆ.5 வழக்கறிஞர் அறிவிப்புக்கு நான் விவரம் சொன்னேனா அல்லது என் தந்தை விவரம் சொன்னாரா என்றால் என் தந்தைதான் சொன்னார். வா.சா.ஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பில் தாவா ஒப்பந்தப்படி ரூ.5 இலட்சம் பெறப்படவில்லை என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது தவறு என்றால் சரிதான். வா.சா.ஆ.5 அறிவிப்பிலும் மாவட்ட குற்றபிரிவு போலிசார் எங்களை மிரட்டி வாக்குமூலம் வாங்கினார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். மாவட்ட குற்ற பிரிவு போலிசாரிடம் தாவா சொத்து கிரைய தொகைக்காக ரூ.35 இலட்சம் பெற்றுக்கொண்டதை ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்ததால்தான்

பின்னிட்டு வா.சா.ஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பு மூலம் அனுப்பும்போது அதுபற்றிய விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் என் தகப்பனார் மற்றும் சகோதரர் பணத்தை பெறுவதற்கு எந்த உறுதிமொழியும் அளிக்கவில்லை என்றுதான் சொல்லியுள்ளேன் என்றும், கிரைய ஒப்பந்தத்தில் உள்ள என் அப்பா மற்றும் சகோதரரின் கையெழுத்துக்களை ஆட்சேபனை செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது, என் அப்பாவிற்குத்தான் தெரியும். வழக்கறிஞர் வேலுதாஸ் அனுப்பிய அறிவிப்பிற்கு மதுரை வழக்கறிஞர் பாபுஜெகன்நாத் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. தாவா சொத்திற்கு தற்போதுவரை பாதை இல்லை என்றால் சரிதான். வாதி கிரைய ஒப்பந்தத்தின்படி பாதை வாங்கிக்கொடுக்கவில்லை என்பதால் ரூ.35 இலட்சம் திருப்பி கேட்டார் என்றால் என்னிடம் கேட்கவில்லை, என் அப்பாவிடம்தான் கேட்கவேண்டும். வாதி தான் கொடுத்த பணத்தை கேட்டபோது நான் என்னிடம் வந்து பணம் கேட்டு பிரச்சனை செய்தால் கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டியதால் வாதி போலிஸ் பாதுகாப்பு கேட்டு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒரு குற்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த குற்ற வழக்கில் மதுரை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் கேணிக்கரை போலிசார் எங்களை அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். கேணிக்கரை காவல் நிலையத்திலிருந்து எனக்கும், என் தகப்பனார், சகோதரர் மற்றும் சகோதரியின் கணவர் முத்துமாரி ஆகியோர்களுக்கு விசாரணை அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அந்த விசாரணை அறிவிப்பை ரத்து செய்ய வேண்டும் என நாங்கள் நால்வரும் தனித்தனியாக சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் வழக்கு போட்டோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் உத்தரவு நாங்கள் தனித்தனியாக தாக்கல் செய்த மனுக்களில் பிறப்பிக்கப்பட்ட பொதுவான உத்தரவின் நகல் என்றால் சரிதான். அந்த உத்தரவு நகல் **வா.சா.ஆ.6**. அதற்கு பிறகு கேணிக்கரை போலிசார்

நடவடிக்கை எடுக்க வேண்டும் என இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் வழக்கு போட்டார்கள் என்றால் சரிதான். நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் கேணிக்கரை போலிசார் 07.12.2023 ம் தேதி எங்கள் நால்வர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை அந்த முதல் தகவல் அறிக்கை என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையின் நகல் **வா.சா.ஆ.7**. வா.சா.ஆ.7 முதல் தகவல் அறிக்கையின் படி போடப்பட்ட வழக்கில் முன்பிணை கேட்டு இராமநாதபுரம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தோம் என்றும், அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பிணைமனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு அந்த உத்தரவு என்றால் சரிதான். அந்த உத்தரவு நகல் **வா.சா.ஆ.8**. வா.சா.ஆ.7 முதல் தகவல் அறிக்கையின் படி கேணிக்கரை போலிசார் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை எங்கள் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் குற்றஇறுதி அறிக்கை அந்த இறுதி அறிக்கை என்றால் சரிதான். அந்த குற்ற இறுதி அறிக்கை **வா.சா.ஆ.9**. கேணிக்கரை போலிசாரின் விசாரணையின்போது கிரைய ஒப்பந்தத்தில் சாட்சியாக கையெழுத்து செய்துள்ள பூமிநாதன் நானும், என் தகப்பனார், சகோதரர் மூவரும் சேர்ந்து ரூ.35 இலட்சம் கிரைய முன்தொகையாக வாங்கினார்கள் என வாக்குமூலம் அளித்துள்ளார் என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.